Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு மார்கழிமீ உஎஉ வெள்ளிக்கிழமை (11 January, 1963) [இல-சo]

# பொங்குகஎங்கும்சைவநற்பண்பு

உழைப்பிற் சிறந்தவர்கள்—ஊக்கம் மிகுந்தவர்கள் தமிழர்கள் என்பது உலகமே ஒப்புக்கொண்ட உண்மை. அத்தகைய தமிழர்களுள்ளும், ஊக்கம் மிகுந்த உழைப்பாளப் பெருமக்கள் உத்தம உழவர்கள் என்பதை உலகுக்குப் பறை சாற்றும் பொன்னுன திருநாள் - பொங்கல் புதுநாள்.

உலகுக்கு உணவு தருவது உழவர் கூட்டம். அந்த உணவோடு உயிரினத்தை ஓம்பி வளர்க்கும் ஒண்கதிர்ச் செல்வனுக்கு பொங்கலிட்டு நன்றி செலுத்தும் புனிதமான ஒரு கொண்டாட்டத்தையும் உலகுக்குத் தந்துள்ளது தமிழுழவர் கூட்டம்.

நாட்டில் பொருள்வளம் பொங்க, மக்கள் மனங்களிலே பண்புவளம், இறை பக்தி வளம் பொங்க, உலகெங்கும் உயரிய நோக்கங்களின் களஞ்சியமான சைவ மணம் பொங்க உலகம் உய்வதாக. இந்துசாதனம் ஆதரவாளர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

---

## நற் சிந்தனை

பத்மா சனத்தில்
பரிவுட னிருந்து
சித்த விருத்தியைத்
தீர்த்திடு வோமே

---

## நாவலர் கட்டுரைப் போட்டி

—:—

நாவலர்கட்டுரைப்போட்டி முடிவுகளை நாம் எதிர்பார்த்ததுபோல இவ்விதழில் வெளியிடமுடியாமற்போனமைக்கு வருந்துகிறோம். விரைவில் முடிவுகளை அறியத்தர முடியும் என நம்புகிறோம்.

---

உ

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தருேன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றும்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகோள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புந்தோன்றும்
பொழிறிகளும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவேய்யோன்
ருனாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

---

## பரந்த நோக்குடையது சைவம்

இன்று விஞ்ஞானம் தலைதூக்கியுள்ளது. நாம் செய்யும் எக்காரியத்திற்கும் விஞ்ஞானத்தின் துணையையே நாடவேண்டியிருக்கிறது. விஞ்ஞானம் மக்களின் உடல் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. அதேபோல ஆத்ம வளர்ச்சிக்கு அத்தியாவசியம்வேண்டப்படுவது மெய்ஞ்ஞானம். மெய்ஞ்ஞானத்தைப்பெறுவதற்கு கடவுட் தியானம், மந்திர ஜெபம், பிரார்த்தனை ஆதியன செய்தல் வேண்டும். இவ்வாறு திவ்விய ஜீவன சங்கத்தைச் சேர்ந்த மாதாஜீ அம்மையார் அவர்கள் தெல்லிப்பழை - பாலர் ஞானோதய சபையாரால் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அம்மையார் தொடர்ந்து பேசுகையில் எங்கும் நிறைந்த இறைவனை வழிபடுவதற்கு முக்கிய அம்சமாகத் திகழ்வது ஆலயம். மற்றைய மதத்தவர்கள் இறைவனை ஒரு குறிப்பிட்ட இடத்திலே தான் வணங்குவார்கள். ஆனல் சைவம் பரந்தநோக்குடையது. இறைவனது உருவத்தை, மண், மஞ்சள் முதலாய பல பொருட்களால் அமைத்து வணங்கலாம். பிரகலாதனுக்குத் தூணினின்றும் காட்சி கொடுத்தார் இறைவன். பிறகினிடத்தே தீ போலச் சர்வவியாபியான இறைவனை ஆலயத்திலே வணங்குவதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று ஆலயத்திலே அமைதியாக இருந்து ஜெபம் தியானம் முதலியன செய்யலாம். இரண்டாவது யாவரும் ஒன்று கூடிப் பிரார்த்திக்கலாம். ஷை விழா 5-12-62 புதன் கிழமை மாலை சபைத்தலைவர் தலைமையில் கொண்டாடப்பட்டது. செல்வன் நா. சிவகுமாரன் வரவேற்புரை வாசித்தார். செல்வன் சி பாலகிருஷ்ணன் நன்றியுரை கூறினர்.

---

## பொங்கலின் பொற்பு எங்கணும் திகழ!

[தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்]

பொன்னிறங் கெழீஇய சென்னியங் கடவுள்
மன்னிய அருள்சால் தேன்றமி ழகத்துச்
செந்திரு களிக்கப் பைந்தமிழ் கொழிக்க
ஐந்திணை கண்டு சுந்தர மாக
மாநிலம் புதுக்கி வளம்பல பல்க
மேனில விந்திரன் வானுறை விண்மணி
கண்ண ளுதியர் கருணை பொலியத்
தேவர் நாளுந் திறமுற வீடிய
நற்றவர் தமிழர் நானிலம் போற்ற
இங்கித மான பொங்கலின் போற்பு
எங்கணுந் திகழ வின்பச் சுற்றமும்
நங்கை நல்லாரும் மக்களுஞ் சூழ
செங்கரும் புடனே செவ்விள நீரும்
மங்கல மஞ்சள் இலையுங் கட்டிப்
பற்பல கனிகள் பண்பா யமைத்து
சிற்பரக் கணேசனைச் சீரடி பரவினர்;
அதா அன்று:—
சைவத் திருவுடைச் சான்றோர் மதித்த
உய்வைத் தருந்திரு வுவக்க நாமும்
பொங்க லிட்டுப் பூசை செய்து
அறத்துறை மல்க மறத்துறை மாள
வாழ்வதே நன்றென மதித்திடு வோமே,

---

## கலைச்செல்வி 4-வது ஆண்டு நிறைவுவிழா

ஈழத்தின் சிறந்த தமிழ் மாதசஞ்சிகையாகிய 'கலைச் செல்வி பத்திரிகையின் 4-ம் ஆண்டு நிறைவுவிழா பொங்கல் திருநாளன்று மாலை 4-30 மணியிலிருந்து யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக பிரபல நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன் குழுவினரது நாதஸ்வரக்கச்சேரி நடைபெறும். தொடர்ந்து தொடக்கவுரையும் விழாத் தலைவர் வைரமுத்து C. C. S அவர்களின் தலைமையுரையும் நடைபெற்றபின் 'ஈழநாடு' ஆசிரியர் இராஜ அரியரத்தினம் அவர்கள் கலைச்செல்வி ஆண்டு மலரை வெளியிட்டுவைப்பார்கள்,

**வாழ்த்துரைகள்**

வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம், பண்டிதர் க. வீரகத்தி, கலாநிதி சதாசிவம் M. A. Ph. D. ஆகியோர்கலைச்செல்வியின் அரிய இலக்கியச் சேவையைப்பாராட்டிவாழ்த்துரை நிகழ்த்துவர்.

விழாவில் சிறுவர் மிருதங்க அரங்கும் நந்திகேஸ்வர நாட்டியாலயத்தினரின் நடன நிகழ்ச்சியும் இடம் பெறும் எனவும் தெரியவருகிறது.

---

## நாளை தொடங்கும் தமிழ் இலக்கிய விழா

மேற்படி விழா இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை தொடங்கி மறுநாள் வரை யாழ் - மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

சனிக்கிழமை காலை நிகழ்ச்சிகளுக்கு திரு. சு. நடேசபிள்ளை தலைமைவகிப்பார். பத்தி இலக்கியம்பற்றி வித்துவான் க. கி. நடராசனும், உளநூலும் இலக்கியமும் என்ற பொருளில் திரு க. ச. அருணந்தியும் சொற்பெருக்காற்றுவர்.

உரைநடை மரபுபற்றி வித்துவான் பொன். முத்துக்குமாரன் தொடக்கி வைக்கும் கருத்தரங்கில் திரு. சுபைர் இங்கிரனும், பண்டிதர் த. சுப்பிரமணியமும் கலந்துகொள்வர்.

அன்று பிற்பகல் திரு சி. உ. சோமசேகரம் தலைமையில் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை கவிதையின் அவசியம் என்னும் பொருள்பற்றியும், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் தமிழின் சிறப்பியல்புகள் பற்றியும் உரை நிகழ்த்துவர். [illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

## மறவா வரந் தருவாய் ...!

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : பூபாளம் :: தாளம் : ஆதி

பல்லவி

மறவா வரந் தருவாய் — நின்பதம்
வாயால் பாடிட் மனத்தால் துதித்திட (ம)

அனுபல்லவி

இறைவா பகவா ராகவ ராமா
இன்னிசை பொழியும் எழிற்பரந் தாமா (ம)

சரணம்

ஓரிரண் டடியால் உலகளந் தாயே
உரமா ரிரணியன் உடல்பிளந் தாயே
நீரிரு நிலமாய் நீநிறைந் தாயே
நெஞ்சினில் நாரணன் எனஉறைந் தாயே. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

தைப்பொங்கற் திருநாளுக்காக தை கஉ (14-1-63) திங்கட்கிழமை இந்துசாதன அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் வேலை நடைபெறாது.

—அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஹூ மார்கழி மீ
உ௭ ௳ வெள்ளிக்கிழமை

## தைத் திங்கள் சித்தி தருமா?

மாரி வளம் மலிந்த மார்கழித் திங்கள் மணிவாசக விழா மங்கல வைபவத்துடன் கழிந்து சித்திதரும் தைத் திங்களுக்கு வழிவிடுகின்றது. ஞாயிறுபோற்றிச் சைவச் சால்பு சான்ற புதுப் பொங்கல் நிகழும் பெருநாள் மக்கள் உள்ளத்துணர்ச்சியை உரியவழியில் நெறிப்படுத்தி இல்வளமும் சொல்வளமும் சைவ நல்லொழுக்கத் தொல் வளமும் பொலியச் சிவபெருமானது திருவருளை இறைஞ்சிப் பெறுவோமாக.

பெருக லாந்தவம்
 பேதைமை தீரலாம்
திருக லாகிய
 சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர
 மாயதோர் ஆநந்தம்
மருக லானடி
 வாழ்த்தி வணங்கவே.

என்றபடி புதுப் பொங்கற் பொன்னுளிலே நன்னெறியாவது நமச்சிவாயவே யென்று அஞ்செழுத்தை நெஞ்சகம்நைந்து, பொருத்தமதாவது நீறு என்று விருப்புடன் விபூதியணிந்து எம்பிரானுடைய கோயில் புக்கு வழிபட்டு தைத் திங்கள் தரும் சாந்தத்தை அநுபவிப்போமாக.

பொங்கலில் ஒரு புதுமை காண்போம்; எங்கணும் அறிவொளிபரப்பிய பாரதப் பழமைமையைத்தாக்குஞ் செஞ்சினப் பொதுவுடைமைப் போக்கு மாறவும் சைவச்சால்பு தாரணியெலாம் விளங்கவும் எழுச்சி காண்போம். அன்பும் அறனும் மன்னும் நன்னெறி யரசுமுறை காண்போம். புலால் மறுத்த பூமி சைவத்தின் அகம் என்ற உண்மையை எடுத்துக்காட்டாக இருந்து ஏனையோர் அறிந்தொழுகும் இன்பம் காண்போம். ஒன்றன் உடல்சுவை உண்பார் வாழும் உலகுக்கும் கொல்லாமை அறமெனக் கொண்டொழுகும் உலகுக்கும்

## அமுது செய்து உளம் மகிழ்வர்...!

★

— புலவர் திரு. சி. சின்னையா —

மதிசுத னுகைதரு மெழுதர கதமொரு
 வடிவுகொ ளருள்பெறு மிரதமிசை
வருபக லவனுறு தனுவினை யொருவிநன்
 மகரம துறவரு தினமதனில்
துதிபெறு தமிழர்க ளுறைசிவ மணமிகு
 தொழுதகு பதியவை களினுமிருள்
தொகைசிதை வுறவிடி வதன்முன மெழுகடி
 கையிலுறு தியிலின விலகுவர்பின்
விதிமுறை யுளசெயல் புரிகுவ ரமுதமும்
 மிகுகம லமுமொரு கலசமதில்
விடுவர்க ளரிசியை யிடுவர்கள் பயறொடு
 வெகுசுவை தருகழை வருகுளமும்
கோதியன லிடுமெழு தடுபடு மறிவர்கள்
 குறைவற விழுதுபெய் குவாதுடன்
குணமுள கறிபழ வகைதயிர் முதலிய
 கொடுபெக லவனுற வுதவுவரே (1)

●

உறவின ரயலவ ரகமுள புதல்வர்க
 ளுவருட னமுதுசெய் துளமகிழ்வர்
ஒருசில வறியவ ரவர்மன மகிழ்வுற
 வுதவுவர் கலைபிற பொருள்கள்சில
நிறைபய றுதவுநல் வயலினை யடைவர்நெல்
 விளைவுக ணுறுவர்க ளறுவடையின்
நிலையறி குவர்சில இளையவர் குழுபுரி
 கனிகளு மறிகுவர் நனிமகிழ்வர்
குறைவற வருள்புரி யிறையுறை விடமது
 குறுகுவர் தொழுகுவ ரருள்பெறுவர்
குணமிகு மறிஞர்சொல் குவர்சில வறிவுரை
 யவைசெவி யறிகுவர் பயனடைவர்
சிறையுறு மயிலிரு புறமுற வரிவையர்
 செறிநுதி யயிலொரு கரமுறவெண்
திசைசெவி குறவணி கழலொலி தரநட
 மிடுதிரு முருகநி னடியர்களே. (2)

## கற்பக விநாயகர் வழிபாட்டுச் சபை

———0———

மேற்படி சபையின் 8-வது வருடாந்தக்கூட்டம் 2-1-63 புதன் இரவு 7 மணிக்கு திரு செ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது.

இன்றைய சூழ்நிலையிலே சமயக்கல்வி அவசியம் என்றும், இத்தகைய சபைகள் நாவலர் பெருமான் காட்டித் தந்த வழியினைப் பின்பற்றிச் சமயப் பணி புரிய முன்வர வேண்டும் என்றும், ஆலயங்களிலேதான் சமயக்கல்வி போதிக்கவேண்டும், எனவும் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் கூறினர். திரு. மு. க. வேலுப்பிள்ளை, திரு. சி. கந்தவேல் அவர்களும் கூட்டுவழிபாட்டின் அவசியம் பற்றிப் பேசியபின் புதுவருட உத்தியோகஸ்தர்தெரிவு நடைபெற்றது. தைமாதத்தில் ஆண்டுவிழாக் கொண்டாடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன

1. ஏழு வருடத்துக்கு ஒருமுறை இந்தியாவிற்குச் செல்லலாம் என்ற சட்டம் நீக்கப்பட வேண்டும், சமய சம்பந்தமான யாத்திரைகளுக்கு இச்சட்டம் தடையானது என அரசினரைக் கோருவது.

2. சமய அறிவுப்போட்டி திருமுறைப்போட்டி நடாத்தில் பரிசுவழங்கல்.

3. ஒவ்வொரு ஞாயிறு தோறும் ஒவ்வொரு அன்பர் வீட்டிற் சென்று பசனை செய்தல்.

4. சமய நூல் நிலையம் நிறுவ வேண்டும்.

நோக்கம் வேறு என்ற மெய்யறிவு விளங்கும் மேன்மையைக் காண்போம்.

வாழ்க அந்தணர்
 வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல்
 வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்
 லாம்அரன் நாமமே
சூழ்க வையக
 முந்துயர் தீர்கவே.

# சுதந்திரம் அடைந்த பின்னரே துயரம்

———:0:———

[ அண்மையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் நாவலர் மண்டபத்தில் நிகழ்ந்த அ. இ. சைவமகாநாட்டில் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் வாசித்த வரவேற்புரை ]

சிவநெறிச் செல்வர்களே!
தாய்மார்களே,
இளைஞர்களே,

திருவருளை முன்னிட்டு எங்கள் யாழ்ப்பாணம்சைவ பரிபாலனசபை தனது 74வது ஆண்டில் சபை நாவலர் ஆச்சிரமண்டபத்தில் நடத்துகின்ற அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் பங்குபற்றக் கூடியிருக்கின்றோம். இத்தகைய சைவ மகாநாடுகளை எங்கள் சபை காலத்துக்குக் காலம் நடாத்தி சைவ சமயத்தையும் செந்தமிழையும் பாதுகாத்துவருகின்றது. 1959ம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் மதுரை திருஞான சம்பந்தர் மடாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு சைவமகாநாட்டைச் சபையார் நடத்தினர்கள். 1960-ம் ஏப்ரில் மாதத்தில் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பிரதமாசிரியர் சைவ சித்தாந்தசரபம் திரு க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் தலைமை வகித்து ஒருசைவ மகாநாட்டை நடத்தினர்கள். 1961ம் ஆண்டில் ஈழநாட்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகம் காரணமாகச் சைவமகாநாடு நடத்தப்படவில்லை. இவ்வாண்டும் சைவ மகாநாட்டைநடத்தலாமோ அல்லது நடத்தாமல் விடலாமோவென சபையாரின் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. கடைசியாக 9-12-62ல் நடைபெற்றசபையின் நிருவாகசபைக் கூட்டத்தில் சைவமகாநாட்டை எதுவிதமும் நடத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது. அதன் பிரகாரம் சென்ற வருடமே கடிதங்கள் எழுதிச்சம்மதம் பெற்ற திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களுக்கும், கோயம்புத்தூர் கௌரவ நீதிபதி திரு. கிரிதாரி பிரசாத் B. A B. L. P.P.A. (Dip) அவர்களுக்கு சேலம் அரசினர் கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீமதி கு. காமாட்சியம்மையார் M. A அவர்களுக்கும் கடிதங்கள் எழுதி அவர்கள் வருகையை ஒருவாறு திடப்படுத்தியபின் சைவமகாநாட்டு நிகழ்ச்சிநிரலை வெளியிட்டோம்.

இக்காலம் இலங்கையிலிருந்து இந்தியா செல்ல விரும்புபவர்களோ அல்லது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வர விரும்புபவர்களோ இலகுவாகப் பிரயாணஞ் செய்ய இயலாது. அதற்குரிய பாஸ்போட் விசா முதலிய சாதனங்களைப் பெறுதல் பகீரதப் பிரயத்தனமாகும். நாங்கள் அழைக்க விரும்பிய மூவருள் திரு. கிரிதாரிபிரசாத் அவர்களே விசாப் பெறக்கூடியதாகவிருந்தது. மற்றைய இருவர்களுக்கும் விசாக்கிடைக்கவில்லை; அக்காரணத்தினால் அவர்களுடைய வருகை மிகவும் கஷ்டப்படும் நிலையாயது.

நமது நாடு சுதந்திரமடைந்தபின் எங்கள் தமிழ் மொழியும், சைவசமயமும் விருத்தியடைவது பெருங்கஷ்டமாக விருக்கின்றது. தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழி யுரிமையை யிழந்துவிட்டார்கள், வித்தியாசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்றமையினால் மாணவ மாணவிகள் தங்கள் சமயத்தை மரபுமுறையாக, தங்கள் சமயச் சூழ்நிலையில் கற்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. கொல்லாமை, புலாலுண்ணாமை, சைவசமயத்தின் முக்கிய அறங்கள் என்னும் தத்துவம் மறையத் தொடங்குகின்றது.

சைவசமய உண்மைகளை நன்கு கற்றுணர்ந்தவர்களே சமயபாடத் திட்டங்களை வகுத்தல் நன்மை பயக்கும். அத்தகையவர்களே சமயபாடப் புத்தகங்களை எழுதி மாணவர்களுக்கு உதவ வேண்டும். சைவசமய மரபையும் முதல் நூல்களையும் புறக்கணித்து பாடத்திட்டங்களையும் புத்தகங்களையும் தயாரிப்பதினால் எங்கள் உயிரினுமினிய சமயம் குன்றிவிடும். எங்கள் நாட்டிலுள்ள சைவச்சபைகள் இவ்வித பிழைகளை நிவிர்த்தி செய்ய முன்வர வேண்டும். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய சமயபாட நூல்கள் பாலபாடங்கள். ஸ்ரீமத். சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய சமயபாடப் புத்தகங்கள் இக்காலத்தில் வித்தியாசாலைகளில் கற்பிக்கப்படும் வழக்கம் அருகி வருகின்றது. —தொடரும்.

## திருக்கோவையார்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ளிய நியாயம்பற்றி மன்னவன், வடபுலத்துக் குதிரை கொள்ளுமாறு மதி நுட்பம் நூலோடுடையவராகிய "தென்னவன் பிரமராயன்" என்ற நாமம் பூண்டு பின் மணிவாசகனாக வர இருப்பவருக்கு உழைகூட்டப் பணிக்கின்றான். அந்த ஊழின் பெருமையைத் தனது திருக்கோவையின்கண்ணே அறிவு நூற்பொருளும் உலகியல் வழக்குமென இரு பொருள் நுதலி எடுத்துக் கொண்ட கோவையிலே தெளிவுறுத்துகின்றார். [தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர்தேர்வு 1963

அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் நடாத்தும் புகுமுகத் தேர்வும் அதன் தாய்ச்சங்கம் (ஆகிய சைவ சித்தாந்த மகாசமாஜம்) நடாத்தும் இளம் சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளும் 1963ம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் (இலங்கையில்) யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறும். இத்தேர்வுகளுக்குத் தோற்றுபவர்கள் 1-4-63 க்கு முன் காட்டிய மாதிரி விண்ணப்பத் தாளைத் தயாரித்தேனும் பரீட்சைக் காரியதரிசி, அ. இ. சை. பு. ப சங்கம், 'வாணியகம்' சிறுப்பிட்டி, நீர்வேலி என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றேனும் விண்ணப்பத் தாளினைப் பூர்த்தி செய்து உரிய கட்டணப் பணத்துடன் 1-5 63க்கு முன் ஷை முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**தேர்வுக் கட்டணம்:-** சைவப்புலவர் புகுமுகத்தேர்வு-ரூபா 3; இளஞ் சைவப் புலவர் ரூபா 5; சைவப் புலவர் ரூபா 8.

**தகுதி:** புகுமுகத்தேர்வுக்கு (G. C. E) 'க. பொ. த. ப' சித்தியெய்தியவர்களும் பிறமத ஆசிரியர்களும் தகுதியுடையவர்களாவர். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ஏனைய ஆசிரியர்களும் சைவப்புலவர் புகுமுகத் தேர்வில் தேறியோரும் தகுதியுடையர். சைவப் புலவர் தேர்வுக்கு இளஞ் சைவப் புலவர்களும் பண்டிதர்களும் வித்துவான்களும் தகுதியுடையர்.

**பரிசும் பட்டமளிப்பும்:** தேர்வில் 100 க்கு 60 க்கு மேல் புள்ளிகள் பெறுபவர்களுக்கு இரண்டு சங்கங்களின் பரிசுகளும் வழங்கப்படும். தேர்வு முடிவுகள் 1963ம் ஆண்டு மார்கழிச் சித்தாந்த இதழில் வெளியிடப்பெற்று, சித்தியடைந்தவர்களுக்குச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பட்டங்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

**அ இ சை. பு ப. சங்கம் அளிக்கும் உதவி:-** இச்சங்கம் தேர்வுக்குத் தோற்றுபவர்களுக்கு உதவிசெய்யும் நிமித்தம் வண்ணார்பண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியாசாலையில் 1-4 63 தொடக்கம் வழக்கம்போல வகுப்புக்கள் நடாத்தவும் அவற்றிற் பங்குபற்ற வசதியற்றோருக்குத் தபால் மூலம் பயிற்சியளிக்கவும் முன் வந்துள்ளது. இவற்றைப்பற்றிய விரிவான விளக்கந் தேவையானவர்களும் பாடநூல்கள் தேவையானவர்களும் பரீட்சைக் காரியதரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாடத்திட்டம்

சைவப்புலவர் புகுமுகத் தேர்வு:— I சாத்திரம் 1. உண்மைவிளக்கம், 2. திருவருட்பயன் 3. 2-ம் சைவவினாவிடை II. இலக்கணம் 1 இலக்கணச் சுருக்கம் (நாவலர்) 2. யாப்பிலக்கணவினாவிடை, 3. அணியிலக்கணவினாவிடை, III. இலக்கியம்; 1 தேவாரம் - 'தோடு' 'கூற்று' பித்தா என்னுந்தொடக்கத்துப் பதிகங்களும் திருக்கேதீச்சரம் கோணேஸ்வரப் பதிகங்களும், 2. திருவாசகம் - சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, 3. பெரியபுராணம் - கண்ணப்பநாயனார்சரித்திரம் (செய்யுள்) 4. மாவைத் திருவிரட்டைமணிமாலை, IV. உரைநடை 1. நான்காம் பாலபாடம் (நாவலர்) 2. கந்தபுராண போதனை (பண்டிதமணி சி க) 3. உயிரிளங்குமரன்நாடகம் (சோமசுந்தரப்புலவர்) 4. சைவசமய சிந்தாமணி (அருணாசல தேசிகர்)

இளஞ் சைவப்புலவர்தேர்வு:- I. இலக்கணம் 1. நன்னூற் காண்டிகை (நாவலர்) 2. நம்பியகப்பொருள் 3. யாப்பருங்கலக்காரிகை 4. தண்டியலங்காரம். II. இலக்கியம் 1. திருமுருகாற்றுப்படை 2. கந்தர் கலிவெண்பா 3. கந்தர் அலங்காரம் 4 கந்தர் அனுபூதி, 5 நால்வர் நான்மணிமாலை, 6. சோணசைலமாலை, 7. நீதிநெறி விளக்கம் 8. திருக்குறள் அறத்துப்பால் (பரி - உரையுடன்) 9. சுந்தரர் தேவாரம் (முழுவதும்) III. சாத்திரம் 1. திருவுந்தியார், 2 திருக்களிற்றுப்படியார், 3. உண்மை விளக்கம் 4 திருவருட்பயன் 5. கொடிக்கவி 6. வினா வெண்பா IV உரைநடை 1. முருகன் அல்லது அழகு (திரு. வி. க.) 2. வாகீசர் அல்லது மெய்யுணர்வு (சிவக்கவிமணி) 3. பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும் 4. தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா. சு. பிள்ளை MA, ML) 5. பெரியபுராண வசனம், 6. திருவிளையாடற்புராண வசனம் (நாவலர்)

சைவப் புலவர் I. இலக்கணம், 1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர்) 2. தொல் - சொல்லதிகாரம் (சேனாவரையம்) 3. தொல்- பொருளதிகாரம் (இளம்பூரணம்) 4. தருக்கசங்கிரகம் (சிவஞானமுனிவர்) II. இலக்கியம்: 1. பெரியபுராணம் (திருஞான சம்பந்தர்புராணம் முழுவதும்) 2. திருவிளையாடற்புராணம் மதுரைக்காண்டம் 3. கந்தபுராணம் தட்சகாண்டம் 4. திருக்குறள் பொருட்பால் (பரி - உரையுடன்) III. சாத்திரம் 1. சிவஞானபோதச் சிற்றுரை 2. சிவஞானசித்தியார் சுபக்கம் (சிவஞானமுனிவருரை) 3. சிவப்பிரகாசம், 4. சங்கற்ப நிராகரணம் IV. உரை நடை 1. சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்) 2 சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவகுருநாதபிள்ளை) 3. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேலுமுதலியார்) 4. சிவஞான முனிவர் உரைநடை நூல்கள் 5. பெரியபுராண சூசனம் (ஆறுமுக நாவலர்) 6. திராவிடப் பிரகாசிகை (சபாபதிநாவலர்)

# திருக்கோவையார்

[அணிமையில் நடைபெற்ற அ. இ. சைவ மகாநாட்டில் இரண்டாம் நாளன்று கலந்துகொண்ட வித்துவான், சைவப் புலவர், திரு. இ திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை]

முற்றொடர்—2

அதனை நோக்கியே

"யாரறிவார் தமிழருமை
என்கின்றேன் என்
அறியாமையன்றே?
மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும்
அறிவுண்டாக்கி
நீரறிவித்தாலறியும்
நிலமுந் தானே"

என்று பாடல் எழுந்தது உயிருள்ளன இல்லன எல்லாம் தமிழ்த் தெய்வத்தின் நலங்காட்டி விளங்கும் நாட்டில் மன்னர் நீதிப்பண்புபற்றியும் சொல்ல வேண்டுமா? வைகை பெருகியபோது தன் நன்மந்திரச்சுற்றத்தை அழைத்து அரிமர்த்தன பாண்டியன் இவ்வேதம் விழைதற்கு ஏது சிந்திக்கின்றான்.

'ஆதியாம் கடவுளெந்தை
ஆலவாய் அமலன் மங்கை
பாதியான் செய்த பூசை
பண்டையிற் குறைந்த
துண்டோ?
நீதியாந் தவத்தின் மிக்கார்
நெஞ்சகம் புழுங்க மண்மேற்
தீதியாம் புரிந்த துண்டோ?
செப்புமின் அமைச்ச
ரேன்றான்"

மானம் நோக்கிற் கவரிமானனைய நீரரும் உற்றதுகொண்டு மேல்வந்துறுவது தெரியும் கோளாரும் மற்றது விதியின் வந்ததாயினும் மாற்றலாற்றும்பெற்றியாரும் ஆகிய நன்மந்திரிச் சுற்றம் தசரதர்க்கு வாய்த்ததுபோலமர்ந்த காரணத்தாலேதான் அரிமர்த்தனன் நீதிவழி திறம்பாது இறைவனைக் கண்ணுற் காணவும் பிரம்பாலடிக்கவும் பேறு பெற்றான். இதை உணர்ந்தே அடிகளார்,

பெண்சுமந்த பாகப்பெருமான்
ஒருமா மேல்
எண்சுமந்த சேவகன்
போலெய்தியதும் வைகைநதி
மண்சுமந்துநின்றதும் ஓர்மாறன்
பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதும் நின்
பொருட்டன்றே புண்ணியனே

என மணிவாசகரை முன்னிலைப்படுத்தி மொழிகின்றார். அந்த நீதி மன்னர்க்கு மந்திரத் தலைவனாகி முதன்முதன் மந்திரியாகிய பேறு எய்தி வடுவிலா வையத்து மன்னிய மூன்றின் நடுவணதாகிய முதன் மந்திரிச் செல்வம் எய்தி அதனால் அறமும் இன்பமும் தேர்ந்து பேற்றின் மேலாக ஐம்பொறி கைபிகந்து அறிவால் அறியாச் செம்புலச் செல்வராகிய காரணத்தாலே வீடுபேறு நினைந்து "அயலறியாமல் வாழ்ந்தார்" காகதா

(தொடர்ச்சி 2 ம்பக்கம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்.
காரைதிவு மேற்கு
அம்பலவாணர் கணபதிப்பிள்ளை
—வழக்காளி.
இல, M.B, 4841
எதிராக:
காரைதிவு வடக்கு சினிவாசகம் சுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியம் தனது காலஞ் சென்ற புருஷன் — ஷை யூர் சுப்பிரமணியத்தின் ஆதனங்களின் கோட்டுப் பிரதிநிதியாக. —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4841-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம் ஆண்டு மாசி மாதம் 9-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா: 1182/58 சதமும் ரூபா 1000-க்கு 23-5-1962 தொடக்கம் 23-8-1962 வரை ஏழுவீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 225-62 சதம்.

காணி விபரம்;

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு வடக்கு இறை "மாப்பாணஊரி" பர. நீ. இல, ஆறு (பர.நீ.இல. 6) பனைகள் வடலிகளும் 'வான்பயிர் செய்பயிர்களும், வீடுகளும், தரவும். எல்லை கிழக்கு அரியகுட்டி கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு கந்தையா பெண் தெய்வானைக்குரியவாதனம், தெற்கு வீரகத்தியார் தம்பிப்பிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும். இதன் பதிவு C 301/63.

1962-ம் ஆண்டு கார்த்திகை மீ 29உ
காரைநகர்.
ஸீவ். ஏரம்பமூர்த்தி,
கொமிஷனர்.
M 236. 11-1-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர், கிழக்கு
சதிருந்தனை
முருகேசு வேலுப்பிள்ளை
—வழக்காளி.
இல. M.B, 3743.
எதிராக
யாழ்ப்பாணம்,
வண்ணார்பண்ணை மேற்கு
தபாற்கந்தோர் ஒழுங்கை
1. நாகமணி நடராசா
2. பெண் சிவக்கொழுந்து
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 3743-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 16-ம் திகதி (16-2-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 7880-ம், இதில் ரூபாய் 6000-க்கு 16 - 11 - 60 திகதி தொடக்கம் 1-6-61 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 265-65 சதம் இதில் ரூபா 300-ம் மேலும் ரூபா 150-ம் இறுபட்டது,

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "வல்லுறுவையடி" வீலப்பரப்பு ஒன்றம் குளி 4 1/8-ம். இது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 6444 - ம் இலக்க வழக்கில் உலாந்தா யோன் மனுவலால் 11-5-55 ல் 1948-ம் இலக்கப் படத்தில் 3 - ம் துண்டாகவும் பயிர்களும் இரு அறைகளும், விருந்தைகளும், விறுந்தை H-ம், குசினி 8-ம் கிணற்றுப்பங்கும் எல்லை கிழக்கு இராசரத்தினம் பாலசுப்பிரமணியத்திற்குரிய 4-ம் துண்டு, வடக்கு கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்கும் இராசரத்தினம் பாலசுப்பிரமணியத்திற்குமுரிய 1-ம், 2-ம் துண்டுகள். மேற்கு 2-ம் எதிராளிக்கும் இராசரத்தினம் பாலசுப்பிரமணியத்திற்கும் பொதுவாகவுடைய 5-ம் துண்டு. இதடங்கலும், மூற்பதிவு D 243/178.

2. மேற்படி வண்ணார்பண்ணை தென்மேற்கிறை 'வெல்லுருவையடி" குளி (4), இது பொதுவாகவுடைய பாதை. இது குறித்த 1948-ம் இலக்கப்படத்தில் 5-ம் துண்டாகவுடையதும் பயிர்களும் 8 தென்னங்கன்றுகளும், 9 கமுகுகளும், 10 பலாக்களும், ஒரு மாவும், எல்லை கிழக்கு இராசரத்தினம் பாலசுப்பிரமணியத்திற்குரிய 4-ம் துண்டு, வடக்கு இராசரத்தினம் பாலசுப்பிரமணியத்திற்கும் 2-ம் எதிராளிக்குமுரிய 2-ம், 3-ம் துண்டுகள், மேற்கு ஒழுங்கை, தெற்கு வீ. சுப்பிரமணியத்தின் ஆதனம். இதில் சொரியலாய் 2 - ம் எதிராளிக்குரிய அரைவாசி (½), மூற்பதிவு D 259/123.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 24-12-1962,
M, 232 11-1-63,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய் வடக்கு
நாகமுத்து பொன்னம்பலம்
கைம்பெண் இரத்தினம்
-வழக்காளி.
இல M B 4159
எதிராக
ஆனைக்கோட்டை பழம்தெரு
1. சிவகுரு பரம்சோதி
2. சிவகுரு நடராசா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4159ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1963 ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 2-ம் திகதி (2-2-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2850-ம், இதற்கு 9-4-62 திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 241-10 சதம். இதில் ரூபா 125/- இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை "பெரியகாடும்கற்குளன்கரையும்" நெற்பரப்பு இரண்டு (2ம்) குளி 6½ம் வீடும் செய்பயிர்வான்பயிர்களும்மிகுதிக்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கும் மேற்கும் கந்தன் நாகன் பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம், தெற்கு நாகன் மயிலனுக்கும் பெண் செல்லிக்குமுரிய ஆதனம். இதடங்கலும்,

முற்பதிவு E 330/126.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer,
தெல்லிப்பழை, 14-11-1962,
M 234 11-1-63,

## இவ்வாரம் உங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நோய்கள் குறிப்பாகக் கண் நோய்கள் ஏற்படலாம். செவ்வாய் புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

புதிய பொறுப்புகளில் இலாபம் நிச்சயம், நண்பர்கள் உதவியாயிருப்பர். ஆனால் உடல்நிலை திருப்தியாயிருக்காது, வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. வியாழன் மாலை, வெள்ளி, சனியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ செல்லத்துரை]

(முற்றொடர் - 4)

I. ஆருறு தத்துவம்:

ஐம்பூதத்துக்கும் அதிதெய்வமுந் தொழிலும்
பாராதி ஐந்துக்கும் பன்னுமதி தெய்வங்கள்
ஆரா ரயனுதி யைவராம் — ஓரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கால் தோற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார். 7

கொ—கூ: (மாணுக்கனே) பன்னும் பார் ஆதி ஐந்துக்கும் அதி தெய்வங்கள் ஆர் ஆர்? (எனில், அவர்:) அயன் ஆதி ஐவராம்; அவர்க்கு ஒர் ஓர் தொழில் சொல்லுங்கால் (அவை) தோற்றம் முதல் ஐந்தும் (ஆம்); (அவைகளை அவர்கள்) பழுது அறவே பண்ணுவர் காண்(-பார்.)

ப—ரை: பன்னும் பார் ஆதி ஐந்துக்கும் அதி தெய்வங்கள் ஆர் ஆர் - சொல்லப்படுகின்ற நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்கும் மேலான தெய்வங்கள் யாவரெனில், அயன் ஆதி ஐவராம் - அவர்கள் முறையே பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்போராவர்; அவர்க்கு ஒவ்வோர் தொழில் சொல்லுங்கால் தோற்றம் முதல் ஐந்தும் ஆம் — அவர்களுக்குப் பொருந்திய ஒவ்வொருதொழில்சொல்லுமிடத்து, அவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல் அருளல், என்னும் ஐந்துமாய்; பழுது அறவே பண்ணுவர் காண் பார் - அவர்கள் தத்தம் தொழில்களைப் பிழையறச் செய்வார்கள் என்று அறிவாயாக,

பொழிப்பு; நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுக்கும் அதிதெய்வங்கள் முறையே பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்போராவர். அவர்கள் படைத்தல் முதலிய ஐந்தொழில்களுள் ஒவ்வோர் தொழிலைப் பொருந்துவர்

இதுவுமது

படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்ப னுருத்திரனுஞ் சொல்லில் — திடப்பெறவே
என்றுந் திரோபவிப்ப ரீசர் சதாசிவரும்
அன்றே யனுக்கிரக ராம். 8.

கொ—கூ: சொல்லின், அயன் படைப்பன்; பங்கயக் கண் மாயன் அளிப்பன்; உருத்திரன் (உ-ம்) துடைப்பன்; ஈசர் என்றும் திடம் பெறவே திரோபவிப்பர்; சதாசிவர் (+உம்) அன்றே அனுக்கிரகர் ஆம்.

ப—ரை; சொல்லில் — ஒவ்வொருவருக்கும் அவ்வவர் தொழிலைப் பொருந்தச் சொல்லுமிடத்து, : அயன் படைப்பன் - பிரமா படைத்தலைச் செய்வன்; பங்கயக் கண் மாயன் அளிப்பன் - செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய விஷ்ணு காத்தலைச் செய்வன்; உருத்திரன் துடைப்பன்— உருத்திரமூர்த்தி அழித்தலைச் செய்வர். ஈசர் என்று- திடம்பெறவே திரோபவிப்பர் — மகேசுவரமூர்த்தி எக்காலமும் நிச்சயமாகவே மறைத்தலைச் செய்வர்; சதாசிவர் அன்றே அனுக்கிரகராம் — சதாசிவமூர்த்தி அநாதியாகவே அருளலைச் செய்பவராம் (என்க)

பொழிப்பு: பிரமன் படைத்தலையும், விஷ்ணு க'த்தலையும், உருத்திரன் அழித்தலையும், மகேசுவரர் மறைத்தலையும், சதாசிவர் அருளலையும் செய்வர்.

ஐம்பூத இயல்பு

மண்கடின மாய்த்திரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம்
ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல் — வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து. 9.

கொ—கூ: பார்க்கில், மண்கடினமாய்த் திரிக்கும்; வாரி குளிர்ந்து (+ஏ) பதமாம்; ஒண் கனல் சுட்டு ஒன்றுவிக்கும்; வண்கால் ஓவாமல் பரந்து சலித்துத்திரட்டும்; ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து நிற்கும்.

ப—ரை: பார்க்கில் - ஐம்பூதங்களின் இயல்பை ஆராய்ந்து பார்க்குமிடத்து, மண கடினமாய்த் திரிக்கும் - நிலம் பொருள்களினிடத்துக் கடினமான குணத்தைக் கொடுத்து நிற்கும் (இயல்பினை உடையதாம்); வாரி குளிர்ந்து (+ஏ) பதமாம் - நீர் விடயங்களிற் குளிர்ச்சியுடையதாய் நெகிழ்வு பொருந்தி நிற்கும் (இயல்பினையுடையதாம்); ஒண் கனல் சுட்டு ஒன்றுவிக்கும் - ஒளி பொருந்திய தீ விடயங்களில் சுடுதலைச் செய்து அவைகளைச் சேரச்செய்து நிற்கும் (இயல்பினையுடையதாம்), வண் கால் ஓவாமல் பரந்து சலித்துத் திரட்டும் - வளப்பம் பொருந்திய காற்று நீங்குதலின்றி எங்கும் பரந்து அசைந்து ஒலித்து விடயங்களைத் திரட்டி நிற்கும் (இயல்பினையுடையதாம்); ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து நிற்கும் - ஆகாயம் எப்பொழுதும் எவ்விடயங்களும் நடைபெறுதற்கு இடங்கொடுத்து (அதனுல்) நிறைவுடையதாய் நிற்கும் (இயல்பினையுடையதாம்).

பொழிப்பு: நிலம் கடின குணத்தையும், நீர் குளிர்ச்சி பொருந்திய நெகிழ்ச்சியையும், தீ சுட்டு ஒன்றுவித்தலையும், காற்று எங்கும் பரந்து விடயங்களைத் திரட்டுதலையும், ஆகாயம் எல்லா விடயங்களும் நடைபெறுதற்கு இடமாய் நிறைந்து நிற்றலையும் இயல்பாகப் பொருந்தியுள்ளன.

—தொடரும்.

இவ்வாரம் தை 13-1-63 — 20-1-63

# உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். நண்பர்களுடன் தவருன விளக்கங்களுக்கும் சச்சரவுகளுக்கும் இடமுண்டு. பணமளவில் நல்ல வாரம். புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். வழமையான வேலையில் சில மாற்றத்திற்கு இடமுண்டு. சில காலத்திற்குக் குடும்ப நிலைமை குழப்பலாக இருக்கும். அவதூறு சொல்வோர்பற்றி எச்சரிகையாக இருக்கவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

குடும்பக்கலகங்களுக்கு இடமுண்டு. செலவுகளும் அதிகமாயிருக்கும். ஆனல் போதிய வருவாயும் பெறுவீர். உடல் நிலைக்குப் பிரத்தியேக கவனம் அளிக்கப்படல் வேண்டும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

குழப்பமான வாரம். புதிய முயற்சிகள் தடங்கல்படும் அலுவலகத்தில் சச்சரவுகள் உண்டாம், எல்லா அலுவல்களிலும் எச்சரிக்கையாக நடந்துகொள்க,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நண்பர்கள் மிக உதவுவர் எதிர்ப்புகள் கரைந்துவிடும். பணமளவில் நல்ல வாரம். உடல்நிலை பிரச்சினைக்குரியது கண்ணேய்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

தம்பி தங்கைகள் பெரிதும் உதவுவர். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். சிறு உடல் நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. வயிற்றுக் கோளாறுகள் உண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

நிலபுலங்களால் இலாபம் உண்டாம். தொடக்கத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளின் பின்னர் உமது சாதனைகள் வெற்றிபெறும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பண இலாபங்கள் நிச்சயம். உழவுத்தொழில் வெற்றியாகும். இக்கட்டிலிருந்து நண்பர்காப்பர். தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும், தந்தைவழி உறவினர் மூலமான தொல்லைகளும் உண்டாகலாம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சண்டைகளில் முற்றிநிற்பீர் இனசனமூலமான தொல்லைகளுக்கு இடமுண்டு. உடல்நிலைக் குழப்பங்களும் உண்டாம். சில காலத்திற்குப் புதிதாக எதுவும் செய்யத் தொடங்க வேண்டாம்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உடல்நிலை பாதிக்கப்படும். மன அமைதி இருக்காது. ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். பணயளவில் ஓரளவு நல்ல வாரம்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

செலவுகள் பெருகும். சிறு

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்

இராமு முருகேசு கைம்பெண் கற்பகம் தானுகவும் காலம் சென்ற இ. முருகேசுவின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 365ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரியாகவும். — வழக்காளி.

இல M B 2253

எதிராக

மாவிட்டபுரம்

1. நாகலிங்கம் தப்பிராசா
2. பெண் சிவபாக்கியம்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 2253-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1963ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 9 ம் திகதி (9-2-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 3125ம் இதில் ரூபா 2000 க்கு 2-5-58 திகதி தொடக்கம் 9-12-58 திகதி வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம்முழுதொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 230-87 சதம். இதில் ரூபா 1860 இறுபட்டது.

காணிகளின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரமிறை "ஊரியவத்தை" நிலப்பரப்பு நாலு (4ம்) பனைகளும். எல்லை கிழக்கு குறித்த எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு வல்லிபுரம் பெண் அன்னம்மாவின் ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு அப்புக்குட்டி பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும் இன்னும் வடகிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலும் இன்னும் வடக்கெல்லைக் காணியின் கிழக்குப் பக்கமாக $2\frac{1}{2}$ முழ அகலமும் 7 முழ நீளமுமுள்ள வழிவாய்க்காலும் மிகுதிக் காணியின் வடக்கெல்லையருகாகப் போக்குவரவு செய்யும் பாதையும் வழிவாய்க்காலும்.

2. மேற்படி மாவிட்டபுரமிறை, "ஊரியவத்தை" நிலப்பரப்பு $5\frac{1}{2}$-ம் வான் பயிர்களும் எல்லை கிழக்கு பளனியர் சுப்பிரமணயத்திற்கும் அப்புக்குட்டி பெண் வள்ளிப்பிள்ளைக்குமுரிய ஆதனம். வடக்கு வல்லிபுரம் பெண் அன்னம்மாவின் ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு அம்பலம் தப்புவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும் இன்னும் வடகிழக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலும் இன்னும் வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையருகாகப் பாதையுரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 7-1-1963.
M 233 11-1-63,

நாளைதொடங்கும் தமிழ்.......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் சகுந்தலை வெண்பா அரங்கேற்றமும் நடைபெறும்.

ஞாயிறு காலைக்கு திரு. ச, பேரின்பநாயகம் தலைமை வகிப்பார். தமிழன் கண்ட பொருள்மரபுபற்றி வித்துவான் க. வேந்தனுரும, இலக்கியத்தின் பண்புகள் பற்றி பண்டிதர் வீ. சி. கந்தையாவும் பேசுவர்.

கவிதை மரபுபற்றிய கருத்தரங்கத்தை திரு. சோ. நடராசா தொடக்கி வைக்க, திரு இ அம்பிகைபாகன், (அம்பி) பண்டிதர் க. யோ. ஆசிநாதன் ஆகியோர் கருத்து உரைப்பார்கள்.

பிற்பகல் 2மணியிலிருந்து முதலியார் செ. சின்னத்தம்பியின் தலைமயில் இக்காலத் தமிழ் நடை பற்றி பண்டிதர் வ. நடராஜனும், சிறுகதை இலக்கியமபற்றி திரு. க. தி. சம்பந்தனும், பெண்களும் தமிழிலக்கியமும் என்பதுபற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசுவார்கள்.

பரம் தில்லைராசா குழுவினரின் இசையரங்கும, கலாபவனத்தினரின் நாட்டிய அரங்கும் விழா இறுதியில் இடம்பெறும்.

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 11-1-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org